# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FOURTH SEMESTER – **NOVEMBER 2016**

**TL 4504 – NANNOOL - II (CHOLL)**

Date: 16-11-2016 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00-04:00

**பகுதி-அ** (10X2=20 மதிப்பெண்கள்)

**எல்லா வினாக்களுக்கும் 20 சொற்கள் அளவில் விடையளிக்க.**

01. பொதுமொழி என்றால் என்ன?
02. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமுரிய இடங்கள் யாவை?
03. வினைமுற்றின் இலக்கணத்தைச் சுட்டுக.
04. ‘வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிட்டதன’ - விளக்குக.
05. அன்மொழித்தொகை என்றால் என்ன?
06. அறிவினாவைச் சான்றுடன் விளக்குக.
07. ‘முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்’ - சான்று தருக.
08. ‘மன்’ என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருட்களில் வரும்?
09. உரியியல் காட்டும் பண்பின் இலக்கணத்தை எழுதுக.
10. ஒருகுணம் தழுவிய பலஉரிச்சொற்கள் யாவை?

**பகுதி-ஆ** (5X7=35 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. வழக்கின் வகைகளை விளக்குக.
12. திசைச்சொல்லை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
13. வினையெச்ச வாய்பாடுகளை எழுதுக.
14. வினையெச்சங்களின் முடிபுகள் அமையுமாற்றை விளக்குக.
15. விடையின் வகைகளைச் சான்றுடன் விவரிக்க.
16. இடைச்சொற்கள் உணர்த்தும் பொருட்கள் யாவை?
17. உரியியல் காட்டும் உயிர்களின் பெயர்களை எழுதுக.

**பகுதி-இ** (3X15=45 மதிப்பெண்கள்)

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. வேற்றுமையின் இலக்கணத்தை எழுதி முதல் மூன்று வேற்றுமைகளை விவரிக்க.

    **( அல்லது )**

    தெரிநிலைவினை, குறிப்புவினைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

19. தொகைநிலைத் தொடர்மொழிகளை விளக்கி எழுதுக.

    **( அல்லது )**

    இடைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறி ‘ஓகார’ இடைச்சொல் உணர்த்தும் பொருட்களை எழுதுக.

20. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதி பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்லை விளக்குக.

    **( அல்லது )**

    வழுவமைதி குறித்துக் கட்டுரை வரைக.

---